உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.689/2023

பெயர் :அடைக்கன்(அ.சா.11)

தகப்பனார் பெயர் :அடைக்கன்

கணவர் பெயர் :

வயது :46

கிராமம் :பெரியகற்பூரம்பட்டி,

வட்டம் :மேலூர்

தொழில் :கூலிவேலை

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

10.10.2025

முதல் விசாரணை:

எனக்கு அ.சா.1 செல்வமணியை தெரியும். ஆஜர் எதிரிகளை யார் என்று எனக்கு தெரியாது. 2 ஆண்டுகளுக்கு முன்னர் பெரியகற்பூரம்பட்டியில் பிரச்சினை நடந்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். சாட்சியிடம் பார்வை மகஜர் காட்டப்பட்டு, அதில் உள்ள 1வது கையெழுத்து தன்னுடையது தான் என்று சாட்சி ஒப்புகொள்கிறார் மேற்படி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பார்வை மகஜரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று தெரியுமா என்றால் படித்து பார்க்கவில்லை. சண்டை நடந்தது உண்மைதானா என்று என்னிடம் எழுதி வாங்கினார்கள். யார் என்னுடன் சேர்ந்து கையெழுத்து பார்வைமகஜரில் போட்டார்கள் என்று நினைவில்லை. காவலர்கள் என்னை விசாரிக்கவில்லை

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

என்னுடைய ஊர் பெரியகற்பூரம்பட்டி ஆகும். அ.சா.1 செல்வமணியும் பெரிகற்பூரம்பட்டியை சார்ந்தவர் தான். ஆஜர் எதிரிகளை எந்த ஊர்காரர்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. சம்பவத்தை நான் நேரடியாக

பார்க்கவில்லைர. சம்பவ இடத்தில் நான் இல்லை என்றும் ஆனால் செல்வமணி எனது உறவினர் என்பதால் போலிசார் கேட்டுகொண்டதற்கிணங்க நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. எழுதிய பேப்பரில் கையெழுத்து செய்தேன் ஆனால் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது.நான் செல்வமணி உறவினர் என்பதால் செல்வமணிக்கு ஆதரவாக நான் தற்போது கையெழுத்து செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.10.10 18:50:35 +0530

Assistant Sessions Judge

Melur